பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**12 06 2026** **06 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி, சொல், செயல் அனைத்திலும் தமிழ் மொழியையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் பெருமைப்படுத்தி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2.** தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் சேவைகள் தொடர்ந்து மேம்படுத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

**3.** பயிர்க் கடன்களை முழுமையாக ரத்து செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

**4.** தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இன்று பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** உலக கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் தீரஜ் பொம்மதேவரா - **Kumkum Mogat** இணை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சொல், செயல் அனைத்திலும் தமிழ் மொழியையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் பெருமைப்படுத்தி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

நாளிதழ் ஒன்றில் அவர் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில், தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியச் செழுமை ஆகியவற்றின் மீது பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமதிப்பும், அன்பும் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் செல்லும் இடங்களில் எல்லாம் தமிழின் சிறப்பை பிரதமர் எடுத்துரைத்து வருவதாக குடியரசு துணைத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளை மேலும் பல மொழிகளில் மொழிபெ யர்ப்பது, பல்வேறு நாடுகளில் இருந்து தமிழகத்தைச் சேர்ந்த அரிய தொல்பொருட்கள் மீட்கப்பட்டது என பிரதமர் பல்வேறு

நடவடிக்கைகளை மேற்கொண்டதை திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<>>>

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் சேவைகள் தொடர்ந்து மேம்படுத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் காத்திருப்பு நேரத்தைக் குறைக்கும் வகையில் செயலி அடிப்படையிலான முன்பதிவு நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

<<<>>>

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 14 ஆண்டுகளாக பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ள 7 ஆயிரத்து 500 ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கடரமணன் கூறியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் நத்தம் கிராமத்தில் விவசாயிகளிடம் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெல் கொள்முதல் நிலைய ஊழியர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து

கொடுக்கப்படும் என்றும், லஞ்சம் உள்ளிட்ட முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

<<<<>>>>

தனியார் பள்ளிகள் நியாயமான கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும் என்று மாநில பள்ளிக்கல்வி மற்றும் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் கூறியுள்ளார்.

கோவை வ.உ.சி மைதானத்தில் அரசுப் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியார் பள்ளிகளின் உரிமம் மற்றும் புதுப்பித்தலுக்கான நடைமுறைகள் ஒற்றைச் சாளர முறை மூலம் எளிதாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அடிப்படை வசதிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக திரு ராஜ்மோகன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் பயிர்க் கடன்களை முழுமையாக ரத்து செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கோவையில் நடைபெற்ற அக்கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தவெக தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியளித்தவாறு ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு உடனடியாகத் தொடங்க வேண்டும் என்றும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அமமுக பொதுச்செயலாளர் திரு டிடிவி தினகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப் பொருள் புழக்கத்தைத் தடுக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்.

மாநிலத்தில் பரவலாக மின்வெட்டு பிரச்சினை நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்ற முடியாத தேர்தல் வாக்குறுதிகளை தவெக தனது தேர்தல் அறிக்கையில் கொடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முந்தைய திமுக ஆட்சியின் நீட்சியாகவே தவெக அரசு செயல்படுவதாக திரு டிடிவி தினகரன் கூறினார்.

<<<<>>>>

உதகமண்டலம் நகரின் மேம்பாட்டுப் பணிகளுக்கு மத்திய அரசு அதிக முன்னுரிமை அளிப்பதாக பிஜேபி தேசிய துணைத் தலைவர் திரு. அப்துல்லா குட்டி தெரிவித்துள்ளார்.

உதகமண்டலத்தில் செய்தியதியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுலா நகரமான உதகையை மேலும் மேம்படுத்த மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்படும் என்றார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ச்சியாக நீண்ட காலம் பணியாற்றி வரும் பிரதமர் என்ற பெருமையைப் பிரதமர் திரு நரேந்திர மோடி பெற்றிருப்பது வரலாற்று சாதனை என்று அவர் தெரிவித்தார்.

ஊழலற்ற நிர்வாகத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வழங்கி வருவதால் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளதாகவும், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த முயல்வதாகவும் திரு. அப்துல்லா குட்டி கூறினார்.

<<<<>>>>

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் **842** கோடி ரூபாய் மதிப்பில் விரிவான மறுசீரமைப்புப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

இந்த ரயில் நிலையம் செயல்பாட்டுக்கு வந்து நேற்றுடன் **118** ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய முகப்பு மற்றும் கட்டடக்கலைத் தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில், அதிநவீன வசதிகளை வழங்குவதே இந்த மறுசீரமைப்புத் திட்டத்தின் நோக்கம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க ரயில் நிலையங்களில் ஒன்றாகத் திகழும் எழும்பூர் ரயில் நிலையத்தின் **118** ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், சிறப்புக்

கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இன்று பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கன்னியாகுமரி, திருவள்ளூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, தருமபுரி, தேனி உள்ளிட்ட 14 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே திருப்பத்தூர், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு இடங்களில் நேற்று மாலை பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் மீது புதிய தாக்குதல் நடத்தப்படமாட்டாது என்றும், அந்நாட்டுடன் விரைவில் அமைதி ஒப்பந்தம் எட்டப்படும் எனவும் அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

---------------

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, டேராடூனில் உள்ள ராணுவ பயிற்சி மைய நிகழ்ச்சிகளில் பங்கேற்க இரண்டு நாள் பயணமாக இன்று உத்தராகண்ட் மாநிலத்துக்குச் செல்கிறார்.

---------------

அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

---------------

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் பங்கேற்பதற்காக, வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று தஜிகிஸ்தான் புறப்பட்டுச் செல்கிறார்.

---------------

நாடு முழுவதும் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவது தொடர்பான பணிக்குழுவின் முதலாவது கூட்டம் மத்திய திறன்மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு ஜெயந்தி சௌத்ரி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

---------------

மன்னார்குடி மற்றும் உளுந்தூர்பேட்டை அருகே ஏற்பட்ட இருவேறு சாலை விபத்துகளில் உயிரிழந்த மாணவர்கள் 5 பேரின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

---------------

காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் மாநில அமைச்சர்கள் திரு தென்னரசு, திரு ரஞ்சித் குமார் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

---------------

தமிழகத்தில் கட்டுமானப் பொருட்கள், தட்டுப்பாடின்றி உரிய விலையில் கிடைப்பதை உறுதி செய்வது குறித்து மாநில அமைச்சர் திரு டி.கே. பிரபு தலைமையில் சென்னையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

---------------

ராணிப்பேட்டை மாவட்டம் அம்மூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செயல்படுத்தப்படும் மின்னணு வேளாண் சந்தைத் திட்டம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் திருமதி பிரியா ஆய்வு மேற்கொண்டார்.

---------------

தேசிய அயோடின் குறைபாடு நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியர் திரு விஷு மகாஜன் ஆய்வு மேற்கொண்டார்.

---------------

சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினமான ஜூன் **26**-ம் தேதி சென்னையில் நடைபெறவுள்ள விழிப்புணர்வு ஓட்டத்தில் பங்கேற்க விரும்புவோர், வரும் **22**-ம் தேதி வரை **www.sdat.tn.gov.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

---------------

சென்னையில் நான்முதல்வன் திட்டத்தின் கீழ் உயர் கல்வி வழிகாட்டி கட்டுப்பாட்டு அறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து வேலைநாட்களிலும் செயல்படும் என்று ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் கூறியுள்ளார்.

---------------

சென்னை கண்ணகி நகர் சுகாதார மையத்தில் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் ஆய்வு செய்தார்.

---------------

*விளையாட்டுச் செய்தி*

உலக கோப்பை வில்வித்தை போட்டியில் கலப்புக் குழு பிரிவில் தீரஜ் பொம்மதேவரா - **Kumkum Mogat** இணை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

துருக்கியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்த இணை, அரையிறுதியில் ஜெர்மனியின் **Katharina Bauer - Moritz Weise** இணையை வென்றது.

இதன்மூலம் இப்போட்டியில் இந்தியாவுக்கு முதல் பதக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**இறுதிச் சுற்றில் இந்திய இணை, கொரியாவின் Kim Je - Oh Yejin இணையை எதிர்கொள்கிறது.**

**<<<<The End>>>>**